உ

சிவமயம்.

வேளாளன்

தூத்துக்குடி.

ஆசிரியன்:—. மு. பொன்னம்பலம்.

வயது 1	1105-ளு சுக்லஹு ஐப்பசி மீ 2-உ	மாதம் 7

"அன்பர் பணிசெய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே."

சமூக கனவான்களுக்குச் சமர்ப்பிக்கும் விண்ணப்பம்.

கனவான்களே! நம்சமூகத்தில் அளவிலா ஆர்வங்கொண்டு நமது வேளாளனை ஆரம்பித்து என் வியாபாரத்தையுங் கவனியாமல் கைப்பொருளைச் செலவு செய்து பல கஷ்டங்களினிடையே ஏழு மாதங்களாக நடத்திவருகின்றேன். தங்களுடைய உத்திரவின்பேரிலும், தங்களின் உற்றார், உறவினர்களின் உதவியால், தங்கள் உத்திரவன்னியிலும் வேளாளனை ஆதரிப்பீர்களென்ற முழு நம்பிக்கையின் பேரிலும அனுப்பினேன். தாங்கள் அனைவர்களும் அன்புடன் பெற்று வருகிறீர்கள். ஆனால், தங்கள் சந்தாத் தொகைகளைப் பெரும் பகுதியினர் இன்னும் அனுப்பியுதவவில்லை. அனுப்பி யுதவாத அன்பர்களுக்கு நாலாவது இதழில் அறிவித்தபடி ஐந்தாவது இதழ்முதல் வி. பி. யில் அனுப்பி வருகின்றேன். கனவான்களெல்லாரும் வி. பி. யைப் பெற்றுச் சந்தாவைச் செலுத்தி வேளாளனை ஆதரிக்க அன்புடன் வேண்டுகின்றேன். வி. பி. யில் சந்தாவைச் செலுத்த மறுத்து விடுவீர்களாகில் எமக்கு மிகுந்த நஷ்டமும், கஷ்டமும், மனத்தளர்ச்சியும் ஏற்படுமென்பதைத் தாழ்மையாய்த் தெரிவிக்கின்றேன்.

—பத்திராதிபன்.

கலியாண காலமும் கவர்ண்மெண்டின் கட்டாயமும்

நம் நாட்டில் தற்காலம் எல்லா விஷயத்தையும் ஆராய்ச்சி செய்வதும் சீர்திருத்தஞ் செய்வதுமாக ஏற்பட்டுவிட்டது. ஆராய்ச்சியும் சீர்திருத்தமும் அவசியமே. ஆராய்ச்சியையும் சீர்திருத்தத்தினையும் நாம் மறுக்கவில்லை. அளவுடைய ஆராய்ச்சியும் சிறப்புற்ற சீர்திருத்தமும் அவசியமே யன்றி அளவற்று வரன்முறையற்று சுருதி யுக்தி அனுபவங்களுக்கு மாறுபட்டு ஆராய்ச்சி செய்வதும் சீர்திருத்தஞ் செய்வதும் அவசியமற்றதோடு அனுவசியமுற்றதென அறிவுடையார் அகற்றிவிடுவாராதலின் அதனை நாம் மறுக்கின்றோம். ஆகவே வரன்முறையான ஆராய்ச்சியும் சிறப்பினுஞ் சீர்திருத்தமும் அவசியமே. சீர்திருத்தம் சமூகச் சீர்திருத்தம் சமயச் சீர்திருத்தம் அரசியல் சீர்திருத்தம் எனச் சீர்திருத்தங்கள் பலவகைப்படும். சமூகச் சீர்திருத்தம் சமூக மக்களாலும் சமயச் சீர்திருத்தம் அதற்குரிய மக்களாலும் அரசியல் சீர்திருத்தம் அரசியல் ஆராய்ச்சி அநுபவமுடையவர்களாலும் செய்யப்பெறவேண்டும். அன்றி அரசியல் சீர்திருத்தத்தைச் சமய ஆராய்ச்சியாளரும் சமயச் சீர்திருத்தத்தை சமூகச் சீர்திருத்தக்காரரும் சமூகச் சீர்திருத்தத்தை அரசியற்றுறைவல்லாரும் சீர்திருத்தஞ்செய்யப் புகுவது முற்றிலும் முரண்படுவதாகும். முடியாமையுமாகும். தற்பொழுது கலியாணத்திற்குரிய காலத்தை நிரணயஞ் செய்வது பெரிதும் சமூக மக்களைப் பொறுத்ததாகும். அதனை அரசியற்றுறைவல்லார் ஆராயப் புகுந்து பால்ய விவாஹம் பல வகையிலும் பயனற்றதென்று பகர்தலோடு மக்கள் வாழ்க்கையை அடியோடு கெடுத்துவிடுகின்றதெனக் கண்டு அதனை அரசியல் மன்றத்தில் மசோதாவாகக் கொண்டுவந்து நிறைவேற்றி வைத்திருக்கின்றனர். பால்ய விவாஹத்தால் விளையும் இன்ப துன்பங்களைப்பற்றி நாம் விரிவாக விளக்க தற்பொழுது முன்வரவில்லை. சுருங்கக்கூறின் நன்மையும் உண்டு; தீமையும் உண்டு.பால்ய விவாஹத் தடையாலும் நன்மையும் உண்டு தீமையும் உண்டு. உலக வாழ்க்கையில் உயிர்கட்கு இன்ப துன்பம் இயல்பு. துன்பங் கலவாத தனி இன்ப

மும் இன்பங் கலவாத தனித் துன்பமுமுள்ள நிகழ்ச்சிகள் உலகி யலிலில்லை என்பது உறுதி.

தவிர மசோதாவைப் பற்றிச் சிறிது ஆராய்வோம். கலி யாண வயது மணமகனுக்குப் பதினெட்டு, மணமகளுக்குப் பதி னாலு. இது இளமை (பருவகால) மணம் என இயம்ப இயலாது. பாலப்பருவ மணமென்பதை மறுப்பார் யாருமிரார். மகனுக் குப் பதினெண் வயதைப் பாலப்பருவமென்வும் உலகியல் விவகா ரங்கள் அவர்களைப் பாதிக்காதென்றும் அவர்களை மைனர் என் றும் பதினெண் வயதுக்கு மேற்பட்டாரை பத்தொன்பது வய துடையாரை மேஜரென்றும் உலகியல் விவகாரங்களுக்கு (கொடுக் கல் வாங்கல், சான்றுகூறல் முதலியவை) உவந்தவர்களென்று அர சாங்கத்தாரே விதிசெய்தும், விவகாரங்களில் நடத்தியுங் காட்டு கின்றனர். கொடுக்கல் வாங்கல் சான்றுகூறல் முதலியவைகட்குக் கூட உதவாத மகன் "இல்லறமல்லது நல்லற மன்று" என்றியம் பிய அரிய மணவாழ்க்கைக்கு இல் வாழ்க்கைக்கு எங்ஙனம் இயல் புடையவனாவான். இனி பெண்மக்களுக்குத் தற்காலம் பெரும் பாலும் பதினாலு வயதுக்குக் குறைய விவாஹம் நடைபெறுவ தில்லை. ஏனென்றால் தகுதியுடைய மணமகன் கிடைப்பதும் மணமகனுக்கு வேண்டும் பொருள் முதலியன கொடுப்பதும் அதற்குரிய வசதிகள் கிடைப்பதும் மிக அருமையாதலால் இயல் பாக பிராமணர்கட்குள் தற்காலம் மணத்திற்குரிய காலம் கடந்து தான் வருகின்றது. ஏழு வயது முதல் பத்து வயதுக்குள் நடை பெறும் மணங்கள் மிகமிகச் சுருக்கம். தவிர பத்து வயது மணத் திற்கும் பதினாலு வயது மணத்திற்கும் வேறுபாடு இருப்பதாக நாம் கருதவில்லை. ஏனென்றால் நம் நாடு தற்காலமிருக்கும் வறுமை நிலையில் பதினாலு வயதுக்குள் பெண் பருவ நிலையடை வது மிக அருமை. பருவநிலை யடைவதற்கு பல்முள்ள பல்வகை உணவுகள் உண்ணவேண்டும். உடல்வலு மிகுதியால் பருவநிலை யடைதல் இயற்கை. அரை வயிற்றுக் கஞ்சிக்கு அலைந்து திரி யும் இந்தியா நாட்டிலா பதினாலு வயது பருவ வயதாகும். ஆகவே பதினாலு வயது மகளுக்குப் பருவகால மணத்திற்குரிய

வயதென் வரையறுத்துக்கூறுவது எவ்வாற்றானும் பொருந்ாது. மகள் பருவமடைந்த பின்னரே மணமக்கள் கூடிக் கலந்து வாழ்க்கை நடத்த இயலும். பக்குவமாகாத பெண்ணுடன் கூடிக் கலப்பாருமிரார் கூடிக்கலத்தலு மியலாது. இந்த நிலைமையில் எழுவயது மணமும் பதினாறு வயது மணமும் வேறுபாடற்றதே யாகும்.

மக்கள் உடல் நலத்தையும் தற்கால பிற்கால வாழ்வின் சிறப்பையுங் கருதுங் கருத்துடையார் பதினாறு, பதினெட்டு வயதுகளை மக்களுக்கு மணத்திற்குரியதாக மதிக்கமாட்டார்கள். உலகியல் வாழ்க்கையே உன்னதமெனக் கருதுவோர் மணமக்களுக்குரிய வயது பதினெட்டும் இருபத்திரண்டுமாகக் கொள்வர். காந்தியடிகளின் கருத்தும் இதுவே. ஆகவே பலதிறத்தாலும் மணத்திற்குரிய மக்கள் வயது பதினாறு பதினெட்டு என்பது பயனற்றதாகும். பெண்கள் பருவமடைந்து பல ஆண்டு, குறைந்தது மூன்று ஆண்டு மணவாழ்க்கையில் மனமாற ஒறுப்படாமலிருத்தல்வேண்டும்; இருந்தால் உடல் வன்மை பெறும் வாழ்க்கைக்குரிய வழிகள் பல படிக்கலாம். பக்குவமானபின் மூன்று வருடமிருக்குமிடத்து மன வேறுபாட்டால் காமவிகார முதிர்ச்சியால் திண்மை இன்மையால் இன்பத்துறையில் எளியராதலும் இயல்பு இதுதான் இன்ப துன்ப இயல்பின் றன்மை. மணத்திற்குரிய காலத்தை மக்கட்கு மதிப்பிட்டுக் கூறுவது மதக்கொள்கையோடு கூடிய சமூகக் கோட்பாடாகும். ஒவ்வொரு மதத்திற்கு ஒவ்வொரு சமூகத்திற்கு ஒவ்வொரு விதமாகச் சட்டதிட்டங்கள் பழக்க வழக்கங்களிருக்கும். காலவியல்பு நோக்கி கழிப்பன கழித்து கொள்வன கொண்டு கேடிலாச் சீர்திருத்தஞ் செய்வது அந்தந்த சமூக மக்களையும் அந்தந்தச் சமயவாதிகளையும் பொருத்ததாகும்.

அங்ஙனமின்றி இனி அரசியற்றுறைவல்லார் சீர்திருத்தப் புகுந்ததும், அதனை அரசாங்கத்தார் கட்டாயச் சட்டமாக்குவதும் முற்றிலும் முரண்பாடாகும். அன்னிய மதம் அன்னிய நாடு அன்னிய ஜாதியாராகிய அரசாங்கத்தார் "மூர்த்தோர்

சொல் வார்த்தை அமுதம்" என்ற முன்னோர் வாக்கிற்கு முரணாக முன்னோராகிய விக்டோரியா மகாராணியார் வாக்கிற்கு முரண்பட்டு (மத விஷயத்தில் தலையிடுதலில்லை) மதத்தில் தலையிட்டு ஹிந்துக்களுக்கும் மகமதியர்களுக்கும் மாறுபட நடந்து கொண்டது முற்றிலும் நியாயமற்றது. சமயச்சார்புடைய அரசியற்றுறைவல்லார் மாளவியா முதலிய மதிமன்னர்கள் ஹிந்துக்களிலும் மகமதிய மதி மன்னர்கள் பலரும் மசோதாவை எதிர்த்திருக்கின்றனர். ஐரோப்பியத் தொகுதியினரும் அரசாங்க நியமனம்பெற்றவர்களும் நீங்கலாகப்பார்த்தால் மசோதாவிற்கு ஆதரவாளர் அதிகமில்லையென்றுதான் சொல்லவேண்டும். ஐரோப்பியரும் அரசாங்க நியமனம்பெற்றவர்களும் வாக்குக் கொடுத்ததினாற்றான் மசோதா நிறைவேறப்பெற்றது. இத்தகைய நிகழ்ச்சியால் பொதுமக்களால் போற்றப்பட்டு பூரணமாய் நிறைவேறப்பட்ட மசோதாவாக மதிவல்லார் மதியார். மசோதா அநுபவத்தில் அமையும்பொழுது பற்பல வழக்குகளும் பொருள் நட்ட முதலிய பற்பல இன்னல்களும் ஏற்படுமென்பது திண்ணம். ஆனால் அரசாங்கத்திற்கு ஆதாயமென்பதில் ஐயமில்லை. ஸ்டாம்பு, அவகாசம் முதலியவைகளால் அளவற்ற ஆதாயமே. அதனைக்கருதியே ஐரோப்பியரும் அரசாங்க நியமனம்பெற்றவர்களும் ஆதரித்தனர்போலும்; அரசாங்கத்தாரும் நிறைவேற்றிவைத்தனர்போலும். ஆதாயமென்றால் யார்தான் விடுவர். பயனற்ற உயிரற்ற இப் பால்ய விவாஹத்தடை மசோதாவால் ஒரு சிறிதும் மக்களுக்குப் பயனில்லை என்பது பசுமரத்தாணியாய்ப் பதிந்துளதெனப்பகர்வோம்.

அறுபது ஆண்டு நிறைந்த அடிகள் வாழ்க.

காந்தியடிகளின் அறுபதாவது ஆண்டு நிறைந்து அறுபத்தோராவது ஆண்டு ஆரம்பநாள் சென்ற புரட்டாசி மீ 15-ம் நாள் மகநட்சத்திரமாகிய திங்கட்கிழமையாகும். அந்நாள் நாட்டிற்கே நன்னாளாகும். புனிதம் நிறைந்த புண்ணியம்

பொலிந்த புது நாளாகும். அடிகளின் நாள் அத்துணைப்பெருமை யுடைத்தாவெனின் ஒப்புயர்வற்ற பெருமையுடைத்தெனப்பேசுவோம், ஏனென்றால் அடிகள்போல் அகிலத்தில் சீலம நிறைந்த சீரியர் மிக மிகச் சிலரேயாவர். அடிகளைப்போல் சகிப்புத் தன்மையும் ஆத்மசக்தியும் அமைந்துள்ளார் அகிலத்திலிருத்தல் மிக் அருமை. பண்டைப்பெரியாரில் அப்பர் சுவாமிகளை அடிகளுடன் ஒப்பிடலாமென்பது நமது துணிபு. சமய உலகம் இதனை ஏற்றுக்கொள்ளாது. இன்னும் இயம்புவோமானால் அடிகளுக்கு மிக்காரும் ஒப்பாருமுள்ள பெரியார் எக்காலத்தும் இல்லை என இயம்புவோம். ஏனென்றால் அடிகள் சர்வ நாட்டாராலும் போற்றப்படுகின்றார். சுருக்கக்கூறின் உலகம் போற்றும் உத்தமரெனலாம். மேனாட்டாரும் உலக சிரேஷ்டர் என்பதை ஒப்புக்கொள்ளுகின்றனர். அடிகளைப்போல் பண்டையப்பெரியார்கள் சமயகுரவர்கள் உலகெலாம் ஒருங்கே போற்றப்பெற்றார்களில்லை. தங்கள் தங்கள் பகுதியினர் சமயத்தினர்களால்மட்டும் போற்றப்பட்டார்கள். கிறிஸ்தவர்கள் ஏசுநாதரின் அவதாரமென்றும் மகமதியர்கள் நபிகள் நாயகத்தின் அவதாரமென்றும் வைணவர்கள் கிருஷ்ணபகவானின் அவதாரமென்றும் சைவர்கள் அப்பர் சுவாமிகள் அவதாரமென்றும் புத்தர்கள் புத்தபெருமான் அவதாரமென்றும தமிழ் மக்கள் திருவள்ளுவர் அவதாரமென்றும் அடிகளைப் போற்றிப்புகழ்கின்றனர். நமநாட்டில் அறுபத்தோராவது ஆண்டை சஸ்டி அப்த பூர்த்தி என்று கொண்டாடுவது வழக்கம். ஏனென்றால் ஆன்றோர்களால் அமைத்த வருடம் அறுபது. ஒரு மனிதன் பிறந்து அறுபது வருடங்கழிந்து பிறந்த அறுபத்தோராவது ஆண்டைக் காண்பது அரிது ஒருவாறு கண்டாலும் மறுபடியும் அறுபது ஆண்டு கழிந்து பிறந்த ஆண்டை காண்பதில்லை. மககட்கு வயது நூறுதான். அறுபது ஆண்டு வாழும் மக்கள் அருமை என்றால் நூறு ஆண்டு வாழ்க்கையைப்பற்றி வாய்திறக்கலாமோ, இந்திய நாடு இயற்கையில் பற்பல பெருமைகளையுடையதெனினும் சிறப்புடைத்தாய பெருமை இரண்டு. அவையாவன பெண் மக்கள் கற்பின் திறமும் மதத்தின் மகிமையுமாகும். மிகமிகப் பெருமை

யுடைத்து அடிகளை ஈன்றெடுத்ததாகும். இப்பெருமைக்கு இணையாய பெருமை யாதொன்றுமில்லை. அடிகள் அவதரித்து வாழும் காலத்து வாழும் மக்களாகிய நாமே நன்மக்கள். வருங் காலமக்கள் காந்தியடிகளைக் கண்ணாற் காணக்கூடப்பெற்றிலோ மேஎன எண்ணி எண்ணி உள்ளம் நைந்து உருகுவர். அடிகளி னும் அறிஞர் இருக்கலாம். ஆனால் அடிகளினும் ஒழுக்கம் நிறைந்த உத்தமரிருத்தலரிது. அற்புதஞ்செய்த ஆன்றோரினும் அற்புதஞ்செய்யாத அடிகளே அதிகப் பெருமையுடன் வாழ்கின் றார். அடிகளை எழுதாத கையும் கையோ அடிகளைப் பேசாத வா யும் வாயோ அடிகளைப் பெறாத நாடும் நாடோ அடிகளைக்காணாத கண்ணுங் கண்ணோ அடிகள் ஆணையை ஏற்காத மக்களும் மக்க ளோ. அடிகள் ஆணை என்ன? கதர் கட்டுவதும் கைராட்டினஞ் சுற்றுவதுமேயாம். அடிகளின் ஆண்டு விழாவை அளவுபெற நடத்தினால் அடிகள் அகமகிழார். அவர் ஆணைவழி நின்றால் அகமகிழ்வர். ஆதலின் அடிகளிடத்து அன்புடையாரனைவரும் அடிகளின் அகமகிழக் கதர்கட்டியும் கைராட்டினஞ் சுற்றியுங் காட்டவேண்டும். அடிகள் என்று காந்தியை நாம் அழைப்பதின் கருத்தென்னவெனின் தமிழ்நாட்டில் பெரியோர்களை அடிகளென அழைத்தல் பண்டைய வழக்கு. எடுத்துக்காட்டாக இங்கே சில குறிக்கின்றோம். அப்பூதியடிகள் இளங்கோவடிகள் பட்டி னத்தடிகள் வாதவூரடிகள் என்பனவாதிய பிறபல. அடிகள் பல் லாண்டு வாழ்ந்து பாமரருள்பெற்று பாமரரையும் பாவலரையும் பண்டிதர்களையும் பயன்பெறச் செய்ய பன்முறை பணிந்து வணங்குகின்றோம். அடிகள் வாழ்க கதர் வாழ்க உலகம் வாழ்க உத்தமர் வாழ்க.

திருக்குறள் மூலமும் உரையும்.

திரு. பொ. முத்தைய பிள்ளை யவர்கள்

பாயிரம்.

க. கடவுள் வாழ்த்து

அஃதாவது நூலியற்றும் புலவர்கள், தாம் வழிபடு கடவுளை யாவது தாம் சொல்லப்புகும் நூலுக்கு ஏற்ற கடவுளையாவது

வாழ்த்துதல், சைவனொருவன் வைணவநூல் செய்யப்புகின் விட்டுணு வணக்கஞ் செய்து நூலைத் தொடங்கல்வேண்டும். வைணவன் சைவநூல் செய்யப்புகின் சிவபெருமானை வணங்கித் தொடங்கல்வேண்டும். இது நூலுக்கு ஏற்ற கடவுளை வணங்கியதாகும். சைவன் சைவ நூலையும், வைணவன் வைணவ நூலையும் செய்யப்புகின், முறையே சிவனும் விட்டுணுவும் வணங்கப்பட்டு, அது வழிபடு கடவுள் வணக்கமும் ஏற்புடைக் கடவுள் வணக்கமுமாகும். அவ்வாறே, திருவள்ளுவரால் கூறப்பட்ட இக்கடவுள் வாழ்த்து வழிபடு கடவுள் வணக்கமும் ஏற்புடைக் கடவுள் வணக்கமுமாகுமென்க. எவ்வாறெனின், கூறுதும். இவ்வாழ்த்து திருக்குறளென்னும் நூலுக்குச் செய்யப்பட்டது. நூலிற் சொல்லப்படுவன அறம், பொருள், இன்பம் என்பன. அறமாவது, உயிர்கட்கு நன்மைசெய்தலும் தீமை செய்யாமையுமாகும். ஆகவே, அறத்தின் பகுதி முட்டின்றி முடிதற் பொருட்டுக் காத்தற் கடவுளாகிய விட்டுணுவை வணங்கல் வேண்டும். பொருளாவது மணி, பொன், நெல் முதலியவாய்ப் பலவகைப்படும். படவே, பொருட்பகுதி முற்றுப்பெறுதற்குப் பொருள்களைத் தோற்றுவிக்குங் கடவுளாகிய பிரமாவை வணங்கல் வேண்டும். இன்பமாவது நாயகன் நாயகிகளிருவரும் ஒற்றுமைப்பட்ட கருத்துடன் கூடி அநுபவிப்பது. இது அவ்விருவரும் புறத்துச் செய்யுந் தொழிலில் நின்றும் நீங்கி அகத்துத் தனித்துக் கூடும்போது நிகழ்வது. ஆதலின், எல்லாவற்றையும் ஒடுக்குங் கடவுளாகிய உருத்திரனை இன்பப் பகுதி முற்றுப்பெறுதற்கு வணங்கவேண்டும். இம்மூவரும் தனித்தனி முதல்வராயின் வரம்பின்மை யென்னுங் குற்றமுண்டாகும். ஆகவே, இம்மூவருக்கும் முதன்மையாக ஒரு பொருளிருக்க வேண்டுமென்பதும், அப்பொருளே முதற் பொருளாகுமென்பதும், அப்பொருளின் ஏவல்வழி நின்று இம் மூவருந் தொழிற் செய்வரென்பதும் பெறப்படும். படவே, அம் முதற்பொருளை வணங்கின் மூவரையும் வணங்கினதாக ஆகும். மூவருக்கும் மேலாக முதற்பொருள் ஒன்று உண்டென் றுணர்ந்தவன் அம் முதற்பொருளைத்தான் வழிபடு கடவுளாகக் கொள்வன். இந்தக் கடவுள் வாழ்த்தில்

கூறப்பட்ட பத்துச் செய்யுட்களாலும் மூவருக்கும் மேலான முதற்கடவுள் வணக்கமே கூறப்படுதலின், இவ்வணக்கம், ஆசிரியருக்கு வழிபடு கடவுள் வணக்கமும் நூலுக்கு ஏற்புடைக் கடவுள் வணக்கமுமாகுமென்க

க. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு

(இதன் பொருள்) எழுத்துக்களெல்லாம் அகரமாகிய முதலை உடையன. (அதுபோல) உலகம் ஆதிபகவனை முதலாக வுடையது. (என்றவாறு)

இச் செய்யுளில் கடவுளுக்கு உவமையாகக் கூறப்பட்ட அகரம் எடுத்துக் காட்டுவமையாகும். உவமைப் பொருளையும் உவமிக்கப்படு பொருளையு மாத்திரம் கூறின் உவமையெனப்படும். இரு பொருளுக்குமுள்ள ஒற்றுமையை யெடுத்துக் காட்டின எடுத்துக் காட்டுவமையெனப்படும். எழுத்துகட்கு அகரம் போல உலகுக்குப் பகவன் எனக் கூறின் உவமையாகும். அகரத்திற்கும் பகவனுக்கும் முதன்மையை எடுத்துக்காட்டுதலின், இது தலைமைபற்றிவந்த எடுத்துககாட்டுவமை யென்க.

இங்கே கூறப்பட்ட அகரமாவது, வரிவடிவாக எழுதப்படும் அகரமுமன்று; ஒலிவடிவாக ஒலிக்கப்படும் அகரமுமன்று. இவ் வகரங்களின்றியும் ஏனைய எழுத்துக்கள் எழுதவும் ஒலிக்கவும்படு மாதலின் இவை முதன்மையாகா. ஒலிவடிவான எழுத்துகளுக்கு மூலமான நாதமொன்று உடம்பினுள் எப்பொழுதும் இயங்கிக்கொண்டிருக்கின்றது அது அகரம்போல ஒலிக்கும். யோகப் பயிற்சி உடையாருக்கு இது விளங்கும். இவ்வுண்மை நோக்கியே நெடுங்கணக்கில் அகரம் முன் வைக்கப்பட்டது. இந்த நாதரூபமாகிய அகரத்தின் பேதந்தான ஒலிவடிவாக ஒலிக்கப்படும் அகர முதலிய எழுத்துக்கள். நாதரூபமான இந்த அகரம் விகாரமின்றி இயல்பாக இயங்கிக்கொண்டு ஏனைய அகர முதலிய எழுத்துக்கட்கு முதன்மையாமாறு போல, பகவன் விகாரமின்றி இயல்பாக இயங்கிக்கொண்டு உலகத்திற்கு முதன்

மையா யிருக்கின்றான். எழுத்தெல்லாமென்றதினால் உயிரெழுத்து மெய்யெழுத்துக்களும், உலகு என்றதனால் அறிவுடைய உயிர்ப்பொருளும் அறிவில்லாத சடப்பொருளுங் கொள்ளப்படும். பகவனென்பது, ஆதி யெனனும் அடையால் மூவருக்கும் முதற்கடவுளைக் குறித்தது. பிறவயப்பட்டு நிற்கும் பொருள் முதன்மையா யிருக்கமுடியாது. உலகத்துக்குப் பகவன் முதல என்றதனால், தன் வயத்தனாதற் றன்மை கடவுளுக்கு உண்டென்பது கூறப்பட்டது. க

உ. கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன
நற்றாள் தொழாஅர் எனின்

(இ-ள்) கடவுள் முதலிய பொருள்களைப்பற்றிக் கூறும் நூல்களைக் கற்றதனால் உண்டாகின்ற பயன் ஒன்றுமில்லை; சுத்த அறிவினையுடைய கடவுளினது நல்ல திருவடிகளைத் தொழாராயின், (எ-று)

இறைவன் றிருவடிகளைத் தொழுதலே கல்வியறிவிற்குப் பயன் என்பது கருத்து. என் என்பது இல்லை யென்னும் பொருள் குறித்தது. கொல்—அசை நிலை. வால—சுத்தம் இயல்பாகவே மலமறைப்பில்லாத அறிவினை உடையவன் என்பது உணர்த்தவாலறிவன் என்றார். திருவடி யெனினும் திருவருள் எனினும் ஒக்கும் "அடியெனு மதுவும் அருளெனு மதுவும் அறிநிடில் நிர்க்குண நிறைவு" என்றனர் ஸ்ரீ தாயுமான சுவாமிகள். உயிர்கட்குத் துன்பத்தை நீக்கி இன்பத்தைச் செய்வது திருவருளாதலின் அதனை நற்றாளென்றார். வாலறிவன் என்றதனால் தூயவுடம்பினனாதற்றன்மை கடவுளுக்குண்டென்பது கூறப்பட்டது. உ

௩. மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

(இ-ள்) அன்பருடைய மனமென்னும் மலரினிடத்து விளங்கித்தோன்றும் இறைவனது பாடசிறைப்பட்ட திருவடிகளைச் சேர்ந்தவர் வீட்டுலகின்கண் அழிவின்றி வாழ்வர். (எ-று)

அன்பருடைய மனம் சிவமணங்கமழப்பெற்று மலர்ந்திருத்தலின் மலரெனப்பட்டது. ஏகுதல்—செல்லுதல். எவ்விடத்தும் எக்காலத்தும் நிறைந்து நிற்கும் இறைவனுக்குப் போக்குவரத்துக் கூறுதல் பொருந்தாது. ஆகவே, ஏகுதலென்பது விளங்கித் தோன்றுதலென்னும் பொருள் குறித்தது. ஏகுதல் திண்ணமாதலின் அத்துணிவுபற்றி ஏகினான் என இறந்தகாலத்தாற்கூறினார். நிலம்—வீட்டுலகம். சேர்தல்-இடைவிடாது நினைத்தல். அன்பால் நினைந்தவர் மனதில் அவர் நினைவைத் தாமாகவே அறிந்து விளங்கித்தோன்றுதலின், இயறகையுணர்வினைதற்றன்மை கடவுளுக்குண்டென்பது கூறப்பட்டது. ௩

௪. வேண்டுதல் வேண்டாமையிலான் அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பையில.

(இ-ள்) ஒரு பொருளையேனும் விரும்புதலும் வெறுத்தலுமில்லாதவனது திருவடியைச் சேர்ந்தவர்க்கு எக்காலத்தும் துன்பங்கள் உளவாகா. "எ-று)

துன்பங்கள் உளவாதற்குரிய ஊழ்வினையுள்ள காலத்தும் என்பதறிவித்தற்கு யாண்டும் என்றார். இக்கருத்துப்பற்றியே "ஊழ்வினையைமாற்றி யுலவாதபேரின்ப வாழ்வுதருஞ் செய்யமலர்முகமும்" என ஸ்ரீ குமரகுருபரசுவாமிகளும், "கன்மமானது கோடி முன்னே செய்தாலும் நின்கருணைப் பிரவாக அருளைத் தாகமாய் நாடினரை வாதிக்கவல்லதோ, எனத் தாயுமானசுவாமிகளும் அருளிச்செய்வாராயினர். துன்பங்களுக்குக் காரணம் விருப்பு வெறுப்புக்களாம். அவ்விருப்பு வெறுப்புக்களில்லாத இறைவனைச் சார்ந்து நிற்கும் உயிர்கள் அவ்விறைவன்றன்மையே தன்றன்மையாகக் கொண்டு விருப்பு வெறுப்பின்றி விளங்குமாதலின், அவ்வுயிர்கட்கு விருப்பு வெறுப்புக்காரணமாக நிகழுந் துன்பங்களில்லாமை பொருந்துமாறு காண்க. விருப்பு வெறுப்புக்கள் யாதானுமொன்றிற் கட்டுப்படுத்தும். கட்டுப்பாடு உடையவுணர்வு முற்றுணர்வு. வேண்டுதல் வேண்டாமையிலான் என்றதனால் முற்றுணர்வுத்தன்மை கடவுளுக்குண்டென்பது கூறப்பட்டது.

ரு. இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

(இ-ள்) இறைவனது மெய்ம்மைசேர்ந்த புகழை விருப்பத்துடன் எப்பொழுதுஞ் சொல்பவரிடத்து அறியாமை காரணமாக உண்டாகும் நல்வினை தீவினைகள் உளவாகா. (எ-று)

இருள்—அறியாமையைக் குறித்தது. நல்வினையும் பிறவிக்கேதுவாய் பொன்விலங்கோடொத்தலின், இருப்புவிலங்கோடொத்த தீவினையோடு ஒப்பவைத்துச் சேராவென்றார்.

பொருள்—மெய்ம்மை. கடவுட்டன்மைகளில்லாதாரைக்கடவுளெனப் புகழல் பொய்மை. அவை முற்றுமுடைய இறைவன் புகழ் மெய்மை. இவ்வுண்மை உணர்த்துதற்குப் பொருள்சேர் புகழென்றார். புரிதல்—எப்பொழுதுஞ் சொல்லுதல். அறியாமையும், அதுகாரணமாக நிகழும் இருவினையும் இயல்பாகவே இறைவனிடத்து இல்லாமையால், அவ்விறைவன் புகழைச் சொன்னவுயிர்களிடத்து அவைசேராவாயின. இதனால், இயல்பாகவே பாசங்களில் நின்று நீங்குதற்றன்மை கடவுளுக்குண்டென்பது கூறப்பட்டது. ரு

சு. பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

(இ-ள்) தோல் வாய் கண் மூக்கு செவியென்னும் ஐம்பொறிகளை வழியாகக்கொண்டு நிகழும் ஐந்து ஆசையினையும் இயல்பாக அறுத்தவனால் சொல்லப்பட்ட மெய்யான ஒழுக்க நெறியின் கண் வழுவாது நின்றவர், பிறப்பின்றி எக்காலத்தும் ஒரு தன்மையாய் வாழ்வர். (எ-று)

ஐந்தாசையாவன:—தொடுதல், சுவை, வடிவம், மணம், ஓசையென்னும் ஐந்து புலன்களினிடத்தும் செல்லும் ஆசைகள். ஒழுக்கநெறி—வேதசிவாகமங்கள். இவற்றைக் கூறும் இறைவனுக்கு வடிவம் இன்றியமையாது வேண்டப்படும். படினும், அது அருள்வடிவமேயன்றி மாயாகாரிய வடிவமன்று. ஆகையால் மாயாகாரிய வடிவமுடைய உயிர்களிடத்து ஆசை நிகழுமாறு

போல இறைவனிடத்து ஆசை நிகழ்கிறதில்லை. உயிர்கள், செய்யத்தக்கது இது, செய்யத்தகாதது இதுவென வரையறுத்து அறிந்துகொள்ளமுடியாத சிற்றறிவுடையன ஆதலின், அவ்வுயிர்கள்மீது வைத்த பெருங் கருணையால் இறைவன் அருட்டிருமேனிகொண்டு வேதாகமங்களை அருளிச்செய்தனன். இதனால் பேரருளுடைமை கடவுளுக்குண்டென்பது கூறப்பட்டது. சு

எ. தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க்கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

(இ-ள்) ஒருவாற்றானுந் தனக்கு ஒப்பில்லாதவனது திருவடியைச் சேர்ந்தவர்க்கல்லாது மனத்தின் கணிகழுந்துன்பங்களை நீக்குதல் கூடாது. (எ-று)

அரிது என்பது கூடாது என்னும் பொருள் குறித்தது. இறைவன் திருவடியைச் சேர்ந்தவர் மனம் அத்திருவடியைவிட்டுப் பிரியாது இன்புறும். அதனைச் சேராதார் மனம காமவெகுளி மயக்கங்களிற்பட்டுத்துன்புறும். இவ்வுண்மையை வற்புறுத்துவதற்கு சேர்ந்தார்க்கல்லால் மாற்றவில்லையென எதிர்மறை முகத்தாற்கூறினார். உவமையால் அளக்கப்படாதவன் என்றதனால், முடிவிலாற்றலுடைமை கடவுளுக்குண்டென்பது கூறப்பட்டது. எ

அ. அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

(இ-ள்) அறக்கடலாகிய அந்தணனது திருவடியாகிய புணையைச்சேர்ந்தவர்க்கல்லது அறத்தின் பிறவாகிய பொருளின்பக்கடல்களை நீந்தல் கூடாது. (எ-று)

உயிர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்னும் பெருங்கருணைக்கடலாதலின் அறவாழியென்றும், அழகியதட்பமுடையவனாதலின் அந்தணனென்றுங் கூறினார். பிறவாகிய பொருளின்பங்களை ஆழியாக உருவகஞ்செய்து தாளைப்புணையாக உருவகஞ் செய்யாமையின் இது ஏகதேசவுருவகம். இன்பக்கடலையும் நீந்தச் செய்யுந்திருவடிபேரின்பக் கடலெனப்பட்டு வாம்பிலின்பமுடைமை கடவுளுக்குண்டென்பது கூறப்பட்டது. அ

௬. கோள்இல் பொறியின் குணம்இலவே யெண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

(இ-ள்) உருவமுதலிய புலன்களைக் கொள்கையில்லாதகண் முதலிய பொறிகள்போல எண்வகைப்பட்ட குணங்களை உடையவனது திருவடிகளை வணங்காத தலைகள் பயனுடையனவாகா. (எ—று)

கோள்—கொள்ளுதல். பொறி—கண்முதலியன. இன்-உவமஉருபு. தலையென்பது தலைகள் என்னும் பொருள் குறித்த சாதியொருமையாகலின் இல என்னும் பன்மையோடு முடிந்தது. காணுதற்குரியது கண்ணும், வாழ்த்துதற்குரியது வாயும், நினைத்தற்குரியது மனமுமாதல்போல வணங்குதற்குரியது தலையேயாகும். தலையே நீ வணங்காய் என்பது அப்பர் திருவாக்கு. இறைவனை வணங்காத தலை பயன்படாதவாறுபோல, இறைவனைக் காணாத கண்ணும் வாழ்த்தாத வாயும் ஏனையவும் பயன்படாவென்பது கொள்ளப்படும். எண்குணங்களாவன—தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை யென்பன. இவை ஒன்றுமுதல் எட்டுவரையுள்ள செய்யுட்களால் முறையே கூறப்பட்டன. சைவநூல்களிலன்றி ஏனைய சமய நூல்களில் இறைவனுக்கு எண்குணமுடைமை கூறப்படவில்லை. எண்குணத்துளோமே, எட்டுவான்குணத்தீசனென்பன தேவாரம். எண்குணஞ்செய்த ஈசனென்பதுந் திருவாசகம். ஆதலின், ஆசிரியர் கொண்ட கடவுள் சைவசமயக் கடவுளாகிய சிவபெருமானே யென்பது துணிபு. கடையிலா அறிவு முதலாக எண்குணங்கள் ஆருகதநூலிற் கூறப்பட்டிருக்கின்றனவேயெனின், அஃதுண்மை. ஆயினும், ஆருகதசமயத்துக்கு விரோதமான சில கருத்துக்கள் திருக்குறளில் காணப்படுகின்றன. அவை உலகை இயற்றியான் உண்டென்றல், பிரமசரிய முதலிய நான்கு நிலைகள் உண்டென்றல் முதலியன, சைவத்துக்கு விரோதமான

கூற்று ஒன்றேனுக்கிடையாது. ஆதலின், ஆசிரியர் கொண்ட கடவுள் அருகக்கடவுளென்றல் பொருந்தாது.

ய. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.

(இ-ள்) இறைவன் திருவடியாகிய புணையைச்சேர்ந்தவர் பிறவியாகிய பெரிய கடலில் நீந்துவர். திருவடியைச் சேராதார் பிறவிக்கடலை நீந்தமாட்டாராய் அதனுள் அழுந்துவர். (எ-று)

சேர்ந்தாரென ஒரு சொல்வருவித்து அடிசேர்ந்தார் நீந்துவர் சேராதார் நீந்தாரென முடித்துக்கொள்க. பிறவியால் வினையும் வினையால் பிறவியும் தொடர்ச்சியாய்க் கரையின்றி வருதலின், பிறவிப்பெருங்கடலென்றார். காணப்படும் கடலுக்குக் கரையுண்டு. பிறவிக்கடலுக்குக் கரையில்லை ஆயினும், இறைவன் கரையும் திருவடி புணையுமாகும்.

உலகிற்கு முதல் கடவுளென்பது முதற்செய்யுளாலும், அவ்வாறு அறிந்த அறிவிற்குப் பயன் கடவுளை வணங்குதலென்பது இரண்டாவது செய்யுளாலும், வணங்குதலாவது நினைத்தலும் வாழ்த்தலும் அவன்நெறிநிற்றலும் என முறையே நினைத்தற்கு இரண்டும் வாழ்த்தற்கு ஒன்றும் நெறிநிற்றற்கு ஒன்றுமாக மூன்றுமுதல் ஆறுவரையுள்ள செய்யுட்களாலும், நினையாதவிடத்துண்டாங்குற்றமும், வாழ்த்தாதவிடத்துண்டாங்குற்றமும், வணங்காதவிடத்துண்டாங்குற்றமும் முறையே ஏழு எட்டு ஒன்பதாவது செய்யுட்களாலுங்கூறி, முடிந்தது முடித்தலென்னும் உத்தியால் வணங்கினவர்க்குப்பிறவியறுதலும் வணங்காதார்க்குப் பிறவியருமையும் பயனென இச்செய்யுளால் கூறிமுடித்தனர்.

குறும்பு செய்யாதவர்கள் முட்டாள் என்று கருதப்படுகின்றனர். இஃது பெரும் முட்டாள்தனம்.

திரு. படேலின்மணிவாக்கு.

ஓளங்கர் ஆராய்ச்சி

உயர் திருவாளர் நித்தியானந்தம் அடிகள்

முன் 6-வது பத்திரிகைத் தொடர்ச்சி.

தனதருளாலொளிதருமிவ்வொளியே; "இயற்கை, கந்தழி, முருகு, கடவுள், இறை, யெனத் தமிழர்களாலும். பரப்பிரம்மம், பரமேசுவரன், என ஆரியர்களாலும், ஆவி, ஆண்டவன் எனக் கிறிச்தவர்களாலும்; அல்லா, நாயன் என இச்லாமியர்களாலும்; சூனியன்" என நாத்திகர்களாலும், இன்னும் பற்பலரால் வேறு பல பெயராலும் திருப்பெயர் பெற்றிலங்குகின்றது. இப்பெயர்களை நிறை பொருளோடு முறையே விளக்குவதே "ஓளம் (ஓம்) ஆம், ஆமென், ஆமீன், ஆ" எனத் திருநிலை கொண்ட திருமந்திரங்களாகும். ஆகலால் இத்திருமந்திரங்களாலாக்கப் பெற்ற மறைகளில் அதன் மறையோர்களால் இதுவொன்றே யாவுமாமென்று விளங்கப் பெற்றுளதொன்றைத் தெளிவாக எடுத்துக் காட்டுதலே சாலச் சிறப்பாகும்.

ஓளம்:—"ஓளமே இயற்கை (கடவுள்) என்று, ஓதுவமறையே" என உண்மை யறிவிளக்கமும்;

"அகரமுதல வெழுத்தெலாமாதி, பகவன் முதற்றே யுலகு" எனப் பொது மறையாம் திருக்குறளும்;

ஆம் (ஓளம்):—"ஓம் தத் சத்" இந்த ஒன்றின் அருவுருமே பாவுமென்றிக் முதலிய நான்மறைகளும்;

"ஆமொன்றே உளது, அதுவே யெல்லாம்" என்று மாண்டூக்ய முதல் பல உபநிடதங்களும்,

ஆமென்:—யோவான் எழுதிய சுவிசேடம், 1-ம் அதிகாரம் 108-ம் பக்கம் முதலாவது பாராவில் "ஆதியில் வார்த்தையிருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திருந்தது. அதே தேவனாகயிருந்தது; மூன்றும் பாராவில், சகலமும் அவர் மூலமாயுண்டாயிற்று; 4-வது பாராவில், அவருக்குள் உயிரிருந்தது; அந்த உயிர்

உயிர்களுக்கு (மக்கட்கு) ஒளியாயிருந்தது" என புதிய ஏற்பாடான விவிலிய வேதமும்;

ஆமீன்:—ஆண்டவன் ஒருவனே. உண்மை ஆண்டவனிடத்துளது, யாவும் அவனருள் மகிமையால் உண்டாகி அவனருளாலேயே உலவுகின்றன. என குர் ஆன் செரீப்பும்; இதுபோல் இன்னும் பல நூற்களும் தெளிவாய்க் கூறுகின்றன.

மேலும், நம் நாட்டு முதுமொழிகளான "எல்லாமதுவே, அதுவொன்றே எல்லாம், எல்லாமவன் செயல், அதுவன்றி அணுவிற்கணுவுங் கூட அசையாது, அதுவே அன்பு (சிவம்), அதுவே உண்மை, அதுவொன்றே பேரின்பம் (மங்கலம்) பயக்கும் பொருள்" என்பவைகளை யெல்லாம் உற்று நோக்கின், "எல்லாம் ஓஉம் என்றும், ஓஉமே யாவுமென்றும்" உள்ளதையே வலியுறுத்துகின்றன, வெண்பதிற்கிஞ்சிற்றும்ஐயமின்றும். இஃதே யாவுமாயும், யாவினுள்ளும் புறமுமாயும், தானே தனி நிலையிற் கடந்ததாயுமுள்ளதைத் தெள்ளத் தெளிவிற் பொருள் நிறைவில் விளக்குவது, தமிழ் மொழியிற் குறிப்பிடப்பட்டுள "கடவுள்" எனும் சொல்லேயாகும்.

இஃதன் சுடரொளி யணுக்களே, பரம அணுக்களாய்ப் பிரிந்து விரிந்து சிற்சில பிரியாவாறு சேர்ந்து "மண், தண் ஆகி உடலாகவும், தீ, காற்று ஆகி உயிராகவும், வெளி (விசும்பு) ஆகி வாழ்வாகவும் வாழ்வின் வலிமையாகவும்" அருள் நிலையில் முன்னர் குறிப்பிடப் பெற்றுள எழுவகைத் தோற்றங்களான உலகாய் இலங்குகின்றன. இஃதொன்றாலேயே "தோற்றமும், வாழ்வும், மறைந்து தோற்றலும்" நிகழ்கின்றன. இது தன்னைத்தானே இவ்வாறு செய்து கொள்வதாகும். இதனாலே புலனாவது யாதெனின்? ஓஉமாகிய எல்லாம் இறப்பதும் பிறப்பதுமில்லையென்றும், அவைகள் யாவும் அன்றின்றென்றும் தன்னளவில் நேர் நிறைநிலையில் நிலையாய் இயங்குகின்றன வென்பதுவேயாம்.

ஔமின் கட்டளை யென்ன?

ஔமின் கட்டளை யாதெனில்? அஃது தன்னைப்போல் தானாகிய எல்லோருமிருக்க வேண்டுமெனக்கட்டளையிடுகின்றது. இந்த வாழ்வு வாழ்தற்குத்தான் நீரின் மேற் றாமரை போன்ற பற்றியும் பற்றாத வாழ்வு எனச் சிறப்புப் பெயராகும். இச் சிறப்புப் பெயர் உடைய வாழ்வு யாதாமெனப் புகட்டுவதே சமயங்கள் (மதங்கள்) என்படும். இந்தச்சமயங்கள் "வைணவம், பௌத்தம், பாரசீகம், கிறிச்து, இச்லாம், சீக்கியம், சார்வாகம்; சம்சமயம்" எனப் பல வுண்டு. இவைகள்யாவும் அடிமுடியில் ஒன்றேயாயினும் இவைகளைக் கடைப்பிடிக்கவல்ல முறையில் (இடை நிலையில்) ஏற்றத் தாழ்வாய் பெரிதும் வேற்றுமைப்பட்டே கிடக்கின்றன. ஆயினும், மனோ வுறுதி கொண்டு ஒரே தன் வழியில் விடாது தொடர்ந்து செல்வோர்க்கு அவ்வேற்றுமைகளுந்தானே புலனாகி விலகிடச் செய்து இன்பப் பேற்றைத் தானே தந்திடும். இதில் எவ்வளவும் ஐயமில்லை. ஆனால் இவைகளுக்கெல்லாம் தலையாய் மக்கள் குலத்தாய் நாட்டின் பழந் தமிழ்ச் சமயமாம் ஔங்கார சமயமே சைவ சமயம் எனப் பெயருறும். இதுவொன்றே அநாதி சமயமாகும். அதாவது ஆதியந்தமற்றதாம். இஃது "அடி, முடி, இடை" முதலிய எல்லா நிலைகளிலும் நேர் நிறையும், நேர் நிறை முறையுங் கொண்டதாகும். இஃது, ஒரு குலத்தார்க்கோ, கூட்டத்தார்க்கோ, தேசத்தார்க்கோ, காலத்திற்கோ உரியது ஆகாதாகவே, எக் காலத்திற்கும் யாவற்கும் உரியதும் பொதுவானதுமாகும்.

பெண்மை

பண்டிதை திரு அசலாம்பிகை அம்மையார்.

பெண்மை பெண் பிறவிக் கியல்பான குணநலங்கள் எனப் பொருள்படும். மீனிற்கு நீந்தும் முயற்சியும், புலிக்குப் பாயுந் திறமும், பறவைக்குப் பறக்கும் பயிற்சியும் பிறரால் பயிற்றப்

படாமலே உள்ளத்தில் இயல்பாய் அரும்பி மலர்வதுபோல், பெண் பிறவிக்கும் கருவிலேயே யமைந்த சில குண நலங்கள் திகழ்ந்தொளிரக் காண்கின்றோம். இதனை மூதாட்டியார்

"அன்னை தயையும் அடியாள் பணியுமலர்ப்
பொன்னினெழி லும் புவிப்பொறையும்—வன்னவுடல்
வேசி துயிலும் விறன் மந்திரி மதியும்
பேசில் இவையுடையாள் பெண்,"

என்னும் வெண்பாவினால் விளக்கி வைத்தனர். இவ் வெண்பாவினால் தயையும், உழைப்பும், எழிலும், பொறுமையும், விநயமும், கூறிய புத்தி வன்மையும், பெண்ணின் இயல்புக் குணங்களென்றும், இக்குணங்கள் அமையப் பெறுதவர்கள் பெண் பிறவியிற் சேர்ந்தவராயினும், இயல்பிலக்கணங்கள் அமைந்தபெண்கள் ஆகமாட்டார் என்றும் உணர்தல் வேண்டும். இவைகளுடன் கல்லினும் கடினமான கற்பு என்னும் சிறந்த குணமும் யௌவனத்தில் நிரம்பப் பெறுவரேல் பெண் பிறவிக்கு நிகரான பிறவி வேறில்லை யென்பதே தெய்வப் புலவரின் திருவுளமாகும். இது பற்றியே.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பெனும்
திண்மையுண் டாகப் பெறின்"

என்றழுத்தமாக "யாவுள?" என்றருளினர்.

இறைவன் படைப்பில் இயல்பிலக்கணங்கள் நிரம்பிய பெண்மணிகள் இல்லையேல் அல்லது பெண்களிடை மேற்கண்ட குணங்கள் அமைந்திலதேல், ஆண்பால் இனத்திற்கு இன்பமும், ஆறுதலும், தண்மையும் இல்லா தொழியுமென்பது திண்ணம். ஒரு சில ஆடவர் மக்கள்நீர்மை மாறி விலங்கின் நீர்மையினராய் அறிஞர் கண்டிரங்கும் நிலைமையும் பெறுவர் என்பது மிகைப் படுத்திக் கூறுதலாகாது.

நமது மூதாட்டியார் பெண் என்பதற்கு இலக்கணமாக வகுத்த வெண்பாவில், இரண்டிரண்டு குணங்களை யுள்ளடக்கி ஒரு குணத்தினை விளக்கி உய்த்துணரவைத்தனர். அதாவது, "அன்னை

தயையும்'' என்றதினால் பொதுவான தயை ஆண் பாலருக்கும் உண்டாதலின் அதைவிட பெண் பாலருக்கிருக்கவேண்டிய தயை ஈன்ற தாயின் ஒப்புயர்வற்ற இயற்கை யன்புடன் கூடிய தயை எனவும், ''அடியாள் பணியும்'' என்ற தொடரினால் உழைப்புடன் பணிவுடைமையும் சிறப்பாக அமைந்திருத்தல் எனவும், ''மலர்ப்பொன்னின் எழிலும'' என்றமையால் இலக்குமிபோன்ற அழகுடைமையும், அதாவது பொலிவுள்ள இடமே செல்வத்தின் அதி தேவதையாகிய இலக்குமி யிருக்கும் பீடம் என்ற குறிப்பும், ''புவிப் பொறை'' என்ற தொடரால் அகழ்வாரைத் தாங் குநிலத்திற் கிணையான பொறுமை யுடைமையும், புவிபோல் தன்பால் தோற்றும சீவகோடிகளைத் தானே போஷிக்கும் வளப்பமுடைமையும, ''வன்னவுடல் வேசி துயிலும்'' என்றமையால் இயற்கை மென்மையும், கணவனை எல்லா வகையாலும் மகிழ்விக்கும் விநய சம்பத்து உடைமையும், ''விறன் மந்திரி மதியும்'' என்றமையால் அறநோக்கி வருங்கால நிகழ்கால நிலைக்கேற்ப இடித்துமுணர்த்தும் உரிமையும, கூரிய மதியும் உடைத்தாயிருத்தல் வேண்டுமென்பதும் பெறப்படுகின்றது.

இதனால் தாயன்பு, தயை, பணிவு, உழைப்பு, செல்வம், அழகு, அரும்பெறல் மக்களை யீனுதல், அங்கப்பாலூட்டி வளர்த்தல், பொறை, மென்மை, விநயம தருணம்நேரில் மேற்சென்றறிவுறுத்தும் உரிமை, கூர்ந்த மதிநலம், இவையனைத்தும் உடையவளே பெண் எனல் விளககம். பெண்களுக் கிருககவேண்டிய குணநலங்கள் பலவற்றை ஐம் பெருங் கூறுகளாக வகுத்த பிராட்டியார் பெண் பாலரிடை நான்கு கூறுகளுக்கு உதாரணமாக அன்னை அடியாள், பொன், புவி ஆகிய பெண்பாலினங்களை ஒப்புக்கூறி ஐந்தாவதாகிய மதியுடைமைக் குதாரணமட்டில் ஆண்பாலினமாகிய விறன் மந்திரியை எடுத்துக் காட்டியதும், உய்த்துணரின், பெண்பாலரிடை ஐந்தில் ஒரு பகுதியாக ஆண்பாற் குணம் அமைந்திருத்தல் வேண்டுமென்பதை அறிஞர் உணர்ந்துள்ளார். ஆணீர்மை கலவாத முழுப் பெண்ணீர்மை யமைந்த பெண்கள் பேதையரிலும் பேதையராய்த் தாமே தமக்குப் பாரமாய் இடர்ப்

படுவர். இவ்வாறே பெண்ணீர்மை கலவாத முழு ஆணீர்மையாளரும் உலகில் உலர்ந்த மாழும், வற்றிய ஓடையும்போல பயனில் வாழ்வு நடாத்தி மூரண்மதி கொண்டு துன்பச் சேக்கையில் வீழ்ந்து அறிஞர் வெறுத்தொதுக்க அழிந்து படுவர். ஆதலின் உலகம் நலம்பெற முயலும் அறிஞர்கள் ஆண்பா லுலகிற்கே வற்றாவின்பமும், சாந்தியும், அளிக்கத் தோன்றிய பெண்களின் நீர்மைக்கு அதாவது உத்தம இயல்பிலக்கணங்களை வளர்க்கும்முறையில்கடன்ற்றுதல் இருபாலார்க்கும் நலம்புரிவதாகும். ஆண்மக்கள் தவறு செய்வதால் விளையும் தீமைகளைவிட, பெண் மக்கள் நிலை வழுவுறலால் விளையும் தீமைகள் மிக மிகப் பெரிதாம். சமூக நாசமே இதன் முடிவு. மக்கள் வாழ்வினையே சிறப்புறச் செய்வதற்கு முதன்மையான பெண்கள் பெண்மை பெற்றுச் சிறத்தல்தான் என்பதை யுணர்ந்தே பல கட்டுப்பாடுகள் பெண்மைப் பாதுகாப்புக்கெனக் கோலி வைத்தனர். அவர்களுடைய ஆழ்ந்த அறிவையும் பரந்த நோக்கத்தினையும் உணரமாட்டாத ஒரு சிலர் (தற்கால நாகரீகர்) பெண்மையின் பெருமையை யழிக்க முற்பட்டிருக்கின்றனர். தற்கால முறையில் பல துருக்கள் பற்றியிருக்கலாம். அத்தகைய மாசுகளை அகற்றுவது கடனேயன்றி துருப் பிடித்த பொருளையே உடைத்தெறிவது அறிவுடைமையாகுமோ?

நாயகனை யுபசரித்தல்; மக்களை வளர்த்தல், விருந்தேற்றல், உணவமைத்தல் முதலிய சிறந்த கடமைகள் குடும்பத் தலைவியினால் நேர் முகமாய் நிறைவேற்றப்படாமல் கூலியாட்களால் நடத்தப்படும் வீடும் வீடாகுமோ? வாழ்வும் ஒரு வாழ்வாகுமோ? இன்பமும் அன்பும் இறந்த நிலையன்றோ இது?

இந்தியக் குடும்பங்களின் ஸர்வாதிகாரிகள் இந்தியப் பெண்களேயாவர். இத்தகைய சிறந்த பதவியை அசட்டை செய்து இனத்திற் குரித்தல்லாத அடிமைப் பகட்டுவாழ்வில் சிக்கி மகிழ்வது பேதமை! பேதமை!! இராமாயணம் சுந்தர காண்டத்தில் அசோக வனத்தில் பிராட்டியாரின் இயல்பை வருணிக்கப்புகுந்த கவி பெண்ணீர்மையைக் குறிப்பிடும் உதாரணமாக

"அருந்து மெல்லடகார்இட அருந்துமென் றழுங்கும்
விருந்துகண்டபோ தென்செயுமோ வெனவிம்மும்"

என விளக்கியிருத்தல் சிந்திக்கத் தக்கதாகும். நாயகனை அடிசில் உண்பிப்பதும், விருந்தினரை யுபசரிப்பதும், ஜனக புத்திரியும் சக்கரவர்த்தியின் முதன் மருகியும் ராம பிரானின் தரும பத்தினியுமாகிய ஒரு சிறந்த அரசகுல வனிதைக்கும் கடமையாக எண்ணப்பட்டது.

தற்காலம் ஆடவனைப்போல் ஆடவியும் பொருளீட்டு முயற்சி மேற்கொண்டு பிறப்புரிமை யிழந்து பொய் வாழ்வில் உறங்கி அந்நிய மோக வலையில் வீழ்ந்து புராதன இந்தியப் பெண்ணுலகின் புகழுக்கும் கேடு சூழ்ந்து மணமற்ற மலர்கள் போல் காணப்படுவது மிகவும் வருந்தத் தக்கதாகும். ஆடவர்களாகிய சகோதரர்கள் மட்டில் முயல்வது யோகிய பயன்றராது. கற்ற பெண்மணிகளும் தங்கள் சமூகத்தைப் பகட்டு நாகரீகத்தில் முழுகாமல் பாதுகாக்க முக்காலும் முயலுதல் வேண்டுமென்பதே இக்கட்டுரையின் முழு வேண்டுகோள்.

அநுமனது அன்பின் திறம்.

திரு. ரா. பி. சேதுப்பிள்ளையவர்கள் பி. ஏ., பி. எல்.

அநுமன் அயோத்தி அண்ணல்பால் இடையறாப்பேரன்பு வாய்ந்து விளங்கினான். அவனது ஆணையைத் தலை மேற்கொண்டு ஆர்வத்தோடு இயற்றினான். இத்தகைய அன்பும் ஆர்வமும் அநுமனிடம் அமைந்திருந்ததை யறிந்த இராமன் அவனைத் தன் ஆருயிர்த் துணைவனாகவே கருதி ஒன்றையும் காவாது அவனிடம் உரைத்தான். திருமகளாய சீதையைத் தேடுமாறு அநுமனைத் தென்திசைக்கு அனுப்பியபோது அம்மங்கையின் அங்க நலங்களை ஒவ்வொன்றாக அவனிடம் இராமன் அறிவித்தான். இன்னும் தானும் சீதையுமேயன்றி, வேறெவரும் அறியாத மறைகளை இராமன் அநுமனிடம் எடுத்துரைத்தான். பின்னும் தலைசிறந்த அடையாளமாகிய கணையாழியையும் அவன்பால் ஒப்புவித்தான். இவ்வாறு இராமன் தன்பால்வைத்த தலை

யாய அன்பிற்கும், தகைமைக்கும், தக்கவாறு அநுமன் அவனது சேவையில் உடலும் உயிருமாக ஈடுபட்டு நின்றான். அருங்கடலைக் கடந்து இலங்கைமா நகர் எய்திய அநுமன் அங்குள்ள மாடமாளிகைகளில் வாழ்ந்த அரக்கரையெல்லாம் பொதுவுற நோக்கிப் போந்தான். அந்நகரில் எங்கும் சீதையைக்காணாது சிந்தை கலங்கி அந்தோ, இரக்கமற்ற இவ்வரக்கன் இராமனது தேவியைக் கொன்றானோ, அன்றி இலங்கைக்கும் அப்பாலுள்ள சிறையில் செறித்தானோ, ஒன்றும் அறியாது உழல்கின்றேனே இங்கு நின்றும் இராமனிடம் சென்று சீதையைக் காணேன் என்று கலங்காதுரைப்பேனோ? அத்திருமகளைக் காணப்பெறின் உயிர் வாழ்வேன். இன்றேல் இலங்கையை வேரோடுபறித்துக் கருங் கடலில் தாழ்த்து அரக்கர் அனைவரையும் அழித்து நானும் மாள்வேன் என்று தன் உள்ளத்தில் எண்ணினான். அந்நிலையில் அநுமன் அருகேயிருந்த அழகிய அசோகவனத்தைக் கண்ணுற்றான். அம்மணிமலர்ச் சோலையின் கண்ணும் மங்கையைக் காணாதிருப்பின் உயிர் நீப்பதாக உறுதிகொண்டான். அநுமன் இராமன் பால் வைத்த அன்பினால் அப்பெருமானது தேவியைத் தன் ஆவியினும், அருமையாகக் கருதிப் போற்றிய மனப்பான்மை இனிது விளங்குகின்றது.

இவ்வாறு மனத்துயர் அடைந்த மாருதி கருமேகத்தினிடையே விளங்கும் கதிரொளிபோல அரக்கியர் நடுவே இலங்கிய திருமகளைக் கண்டபோது அகமகிழ்ந்து ஆடிப்பாடி ஓடிப்பாய்ந்தான்.

> "ஆடினன் பாடினன் ஆண்டும் ஈண்டும் பாய்ந்து
> ஓடினன் உலாவினன் உவகைத் தேனுண்டான்."

என்று கம்பர்பெருமான் கூறுமாறு மாருதி மதுவுண்டவன் போல மகிழ்ந்து மனங்களித்தான். அசோகவனத்தில் சோகமே வடிவாய் அமைந்து மாசற்ற மணிபோல மயங்கியிருந்த மங்கையை நோக்கி,

> "புனைகழல் இராகவன் புயத்தையோ புகழ்
> வனிதயர் திலகத்தின் மனத்தின் மாண்பையோ

வண்கழல் அரசரின் வண்மை வீக்கிடும்
சனகர்தம் குலத்தையோ யாதைச் சாற்றுகேன்''

என்று மாருதி மனம்பூரித்தான். என் தலைவனான இராகவனது புயவலியைப் புகழ்வேனோ கற்பினுக்கு அணியாய மங்கையின் மனநலம் கண்டு மகிழ்வேனோ, இம்மங்கை பிறந்த மரபின் மாண்பைக்கூறி மகிழ்வேனோ, என்று பலவாறாக மாருதி நினைந்து மகிழ்ந்த மனப்பான்மை, அவன் இராமன்பால் வைத்திருந்த இறவாத இன்ப அன்பை இனிது விளங்குகின்றது. தவம்செய்த தவமேபோல் விளங்கிய சீதையின் மாசற்ற மாண்பினை இராமன் தன் கமலக் கண்களால் காணும்பேறு பெற்றிலேனே யென்று மாருதி மனம் வருந்தினான்.

''பேண நோற்றது மனைப்பிறவி பெண்மைபோல்
நாண நோற்றுயர்ந்தது நங்கை தோன்றலால்
மாண நோற்று ஈண்டிவள் இருந்தவாறெலாம்
காண நோற்றிலன் அவன் கமலக்கண்களால்''

என்று அநுமன் கூறும் மொழிகளில் அவனது அன்பின் திறம் நன்கு விளங்குகின்றது.

இவ்வாறு இராமனிடமும் தேவியிடமும் அளவிறந்த அன்பு பூண்ட அநுமன் தனியாய் நலிந்து வருந்திய திருமகளைக் கண்ட போது அம்மங்கையைத் தன் தோளிலேற்றித் தலைவன்பால் ஒப்புவிப்பதே முறை யென்று கருதுவானாயினான். சொல்லிலும் செயலிலும் இறையளவும் முறைதவறாத மாருதி திருமகளாகிய தேவி ஓர் மாது என்பதையும் அம்மாதின் திருமேனி தன்மீது தோய்தல் அவள் கற்பினுக்கிழுக்காம் என்பதையும் கருதாது அவள்பால் வைத்த இரக்கத்தால் முறை மறந்து மங்கையைத் தன் தோள்களில் தூக்கிச் செல்வதாகக் கூறினன். தமிழ் நாட்டின் செம்மைசான்ற நாகரிகத்திற்கேற்றவாறு நூலியற்றிய கம்பர் பெருமான் இலங்கை வேந்தன் சீதையின் மேனியைத் தீண்டாது அவளிருந்த இடத்தை அகழ்ந்தெடுத்து அசோகவனத்தில் சிறையமைத்தான் என்று அழகாய் உரைத்தார். தன் நாயகனை யன்றி மற்றொருவனை மனத்தாலும் மெய்யாலும் தீண்டுதல்

மாதாது கற்பு நிலைக்கு மாசாகும் என்பதை, மதிநலம் வாய்ந்த மாருதி நன்றாய் அறிந்திருந்தான். அசோகவனத்தில் அரக்கியர்நடுவே தனியாயிருந்து தன்விதியை நினைந்து வருந்திய சீதை,

> "உன்னினர் பிறரென உணர்ந்தும் உய்ந்து அவர்
> சொன்னன சொன்னன செவியில் தூங்கவும்
> மன்னுயிர் காத்து இருங்காலம் வைகினேன்
> என்னின் வேறாக்கியர் யாண்டையர் கொலோ."

என்று மொழிந்த மொழிகளை அநுமன் அவளறியாமல் மறைந்து நின்று தெளிந்தவனே யாவான். தன்னைப்பிறனொருவன் நினைந்துகாதல் கொண்டமையே தன்கற்பு நிலைக்குத் தவறென்று கருதிய திருமகள் ஆணுருவம் தாங்கிய அநுமனது தோள்களில் ஏறிச்செல்ல ஒரு சிறிதும் இசையாள் என்பதை அவன் மறந்தமைத்த மனப்பான்மை வியப்பாகவே தோன்றுகின்றது. இவ்வாறு அநுமன் முறைதவறி உரைசெய்தான் என்பதை மெல்லிய மொழிகளால் சீதை அறிவுறுத்தக் கருதினாள். அநுமனது மனம் மாசற்றதென்றும் அவன் கொண்ட அளவிறந்த ஆர்வத்தால் சிறிது முறை தவறி உரை செய்தானென்றும் அறிந்த சீதை ஐயனை,

> "அரியதன்று நின் ஆற்றலுக் கேற்றதே
> தெரிய எண்ணினை செய்வதும் செய்தியே
> உரியதன்றென ஓர்கின்றதுண்டு அதுஎன்
> பெரிய பேதைமைச் சின்மதிப் பெண்மையால்"

என்று நயம்சான்ற நன்மொழிகளால் மாருதி கூறிய மாற்றம் தவறென்று மொழிந்தாள்.

(தொடரும்.)

குறிப்புகள்

விண்ணுலகுற்ற வீரர்

லாகூர் சதிவழக்கில் சம்பந்தப்பட்டவர்களில் யதீந்திரதாஸ் ஒருவர். இவரும் வேறு சிலரும் தங்கள் கேஸ் முடிவடைந்து, தாங்கள் குற்றவாளிகள் என்றும் அல்ல என்றும் முடிவு செய்வதற்குள் தங்களைச் சிறையில் சுயமரியாதையுடன் நடத்த வேணுமென்று விரும்பியும் அதனை மறுத்த அரசாங்கத்துடன் சத்தியப் போர் சத்தியாக்கிரகம் உண்ணாவிரதம் கொண்டனர். உண்ணாவிரதங்கொண்டவருள் தண்ணீர் பருகுபவர்கள் பலர் தண்ணீர் கூட உட்கொள்ளாத சிலரில் இவர் ஒருவர். இவர் அறுபத்து மூன்று நாள் உண்ணாவிரதமிருந்து இறுதியில் உயிர் துறந்தார். இவரின் சகிப்புத் தன்மை வயிராக்கிய வீரம் ஆழ்ந்து ஆலோசிப்பவர்களுக்கு அளகுபெற விளங்கும். வீரரின் பெருமையை விரிப்பிற் பெருகும். பிரேத ஊர்வலம் ஒன்றரைமயில் நீளமும் ஏழுலட்ச மக்கள் கண்ணீருங் கம்பலையுமாகச் சென்றார்கள் என்றால் சவத்திற்கிட்ட பூமாலைகளைப் பிரசாதமாகப் பெற்றார்களென்றால் வீரரின் பெருமையை என்னென்று எழுதுவது. இவரை விசாரித்த அரசாங்க வக்கீலும நீதிபதியும் இவர் நம்முன் கைதியாக யிருந்தாலும் இவரின் தேச பத்தியும வீரத்திறமையும் சுயமரியாதையும் கவனிக்கும் பொழுது இவரை மஹானென்றே சொல்லவேண்டும் என்று கூறினார். வீரத்தால் விண்ணுற்ற வீரர் யதீந்தரதாஸ் இன்னுயிர் இன்புற்று வாழ்க.

இதுவன்றோ சுயமரியாதை

சிறையில் கண்ணியமாக கௌரவமாக நடத்த மறுத்ததற்காக மானமற்ற மரியாதையற்ற வாழ்க்கை இந்தியமக்களுக்கு இயல்புடைத்தல்ல என உணர்ந்து உயிரினும் மானமே மரியாதையே மதிப்புடைத்தெனை இன்னுயிரை இழந்த இளைஞர் யதீந்தரதாஸின் செயலன்றோ சுயமரியாதை.

தேவர் குறளுக்குத் தெள்ளிய உரை

தேவர் திருக்குறளுக்கு எழுந்த உரைகள் பல. எத்தனை பேர் எத்தனை உரை எழுதினும் அத்தனையும் அளகுடைத்தென்பதில் ஐயமில்லை. தற்பொழுது திருவாவடுதுறையாதீனச் சைவப் பிரசாரகரும் தேவகோட்டை சிவாகம சங்கப்போதகாசிரியரும் சிவஞானசித்தியார் சிவஞானபோதம்தசகாரியவிளக்கம் முதலிய நூல்களின் ஆசிரியருமாகிய திருவாளர் பொ. முத்தையபிள்ளை அவர்கள் இவ்விதழ்முதல் முறையே திருக்குறளுக்கு உரை எழுதி உதவுகின்றார்கள். அவர்களுக்கு நமது அன்பான வணக்கத்தைச் செலுத்துவதோடு நேயர்கள் அனைவரும் ஊன்றிப்படிக்கவும் தங்கள் உற்றார் உரவினர்களை இவ்வரிய காலத்தை அவலமாக்காமல் சந்தா நேயர்களாகச் சேர்ந்து ஆதரிக்கும்படி செய்யவும் வேண்டுகின்றோம்.

குபேரன் பட்டணமெனுங் கொழும்பு நகர்.

தற்காலம் குபேரன் பட்டணம் என்று யாவராலும் போற்றப்படும் கொழும்பு நகரில் ஒரே மாத முயற்சியில் நமது வேளாளனுக்குச் சுமார் நூறு சந்தாதார்கள்வரை சேர்ந்திருக்கிறார்கள். சந்தா நேயர்கட்கும் நமது பிரதிநிதியின் நன் முயற்சிக்கும் நமது நன்றி உரித்தாகுக. பத்திரிகையின் உயிர் நாடி கொழும்பு என்பது பத்திரிகைக்காரர்களின் கருத்து. நம் சமூகம் தோன்றிய காலமுதல் இதுவரை யாராலும் ஆரம்பஞ் செய்யப் பெறாத நமது வேளாளனுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு பைசா (சுவைத்துத் துப்பும் வெற்றிலை பாக்குச் செலவில் ஆறில் ஒரு பங்கு) சந்தாவை வருடத்திற்கு இரண்டு ரூபாயை மனமகிழ்ச்சியுடன் கொடுத்துதவி இன்னும் ஆயிரக்கணக்கான சந்தாதார்கள் சேர்ந்து ஆதரிக்கும்படி வேண்டுகின்றோம். உங்கள் ஆதரவினால் நமது வேளாளன் நாளொருவண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து தொண்டாற்றத் துணை புரிவீர்களென்று நம்புகின்றோம்.

வரவேற்பு.

நம நகரில் சில ஆண்டுகட்கு முன் மேஜிஸ்திரெட்டாக

விருந்த நம் சமூக கனவான் திருவாளர் நல்லிவன் பிள்ளையவர்கள் குமாரர் திருவாளர். திருமலையப்ப பிள்ளையவர்கள் நம் நகருக்கு மேஜிஸ்திரெட்டாக வந்திருக்கிறார்கள். பிள்ளையவர்கள் வயதில் இளைஞர். அறிவாற்றல்மிக்குடையார் யாருககும் எளியராம் இயல்புடையார். அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் பொருந்துமாறு நடந்துகொள்வர். பிள்ளையவர்கள் வரவு நல்வரவாருக.

என்ன செய்யப்போகின்றீர்கள்?

வருகிற நவம்பர் ௴ 1௳ யன்று நடைபெற விருக்கும் நகர சபைத் தலைவர் தேர்தலில் நமது சமூக கனவானும் சீரும் சிறப்பும்பெற்று வாழும் திரு. சி. வ. அவர்களுக்கு கவுன்சிலர்களெல்லாம் ஓட்டுச்செய்து தேர்ந்தெடுக்கவேண்டுகின்றோம். ஏனென்றால் நிர்வாகத்தில் திறமையும் செட்டினமும் உள்ளவராதலால் என்க. சமூக மக்களில் கவுன்சிலராக வீற்றிருப்பவர்களே! உங்கள் நெஞ்சில் கைவைத்துப் பார்த்து சமூகத் துரோகஞ் செய்யாமல் ஓட்டுச்செய்யப் போகின்றீர்களா? அல்லது என்ன செய்யப்போகின்றீர்கள்? நிற்கின்றவர்களில் நம்மவர் தகுதியற்றவராகயிருந்தால் சமூகப்பற்றுடன் ஓட்டுச்செய்ய வேண்டுவதில்லை; தகுதியுடையவராக யிருக்கும் பொழுது சமூகத்துரோகஞ்செய்வது முறையா? எனக்கேட்கின்றோம். கூலிக்கு மாரடிக்கும் வேலையால் மதிப்பற்றுப் போவதோடு மதிவல்லார் மதியார் என்பதையும் எண்ணிப்பார்க்க வேண்டுகின்றோம். இது முதல் தேர்தல் வரை சிற்சில அநுபந்தங்கள் வெளியிடக் கருதியுள்ளோம்.

தேசீய இயக்கம்.

நம் நகரில் தேசிய இயக்கம் நாளுக்கு நாள் வலுத்து வருகின்றது. உதாரணமாக ஆயுதபூசையன்று அம்மனுக்கு உடுத்தக்கதர் ரூ 300க்கு விற்பனையாயிருக்கின்றது. தீபாவளிக்கு மிக அதிகமானகதர் விற்பனையாகு மென்று தெரிகின்றது. காங்கிரஸ் அங்கத்தினர் 600க்கு மேல் சேர்ந்திருக்கிறார்கள். இன்னும் அதிகம் பேர் சேர்வார் களெனத்தெரிகின்றது. இரண்டாவது தேசீய மாநாடு வருகிற ஜனவரியில் நடை பெற வேண்டும் ஏற்பாடுகள் துரிதமாக நடை பெறுகின்றன. இவைகளால்தேசீய இயக்கம் வலுத்து வருகின்றதென்பதறிந்து மிகமகிழ்கின்றோம்.

விண்ணப்பம்.

வருகிற தீபாவளி முதலாகவதாவது கதர் கட்டுக,
வெடி வாங்கிச் சுட்டு காசைக் கரியாக்கலாகாது.
கதர் வேந்தர் காந்தியடிகள் கதறுகின்றார்.

ஏழை முகம் பாருங்கள்! பசிக்கு அன்னம் இடுங்கள்!!
கதர் ஆடை கட்டின் கோடி அன்னதான பலன் கிட்டும்.

கீழே காணும் புள்ளி விவரத்தைப் பாருங்கள்; உண்மை புலப்படும். ஒரு ரூபாய்க்கு கதர் வாங்கினால், அதிலே

பஞ்சின் கிரயம்	ரூபா	0	3	9
பஞ்சின் கொட்டை எடுக்கும் கூலி	...	0	0	6
பஞ்சைக் கொட்டித் திரிகள் செய்யக் கூலி	...	0	1	9
நூல் நூற்பவருக்குக் கிடைக்கும் கூலி	...	0	3	9
துணி நெய்பவருக்கு உள்ள கூலி	...	0	4	9
வெளுக்கும் வண்ணானுக்குக் கூலி	...	0	0	6
விற்பவருக்கு ஊதியம்	...	0	1	0
ஆக மொத்தம்	...	1	0	0

எனவே ஒரு ரூபாய்க்குக் கதர் துணி வாங்கினால் எத்தனை ஏழைகளுக்குக் கூலி கிடைக்கிறது என்பதை எண்ணிப் பாருங்கள். குடிக்கக் கஞ்சியும் கூழும் இல்லாமல் வயிறு காயும் ஏழைகளுக்கு ஒரு தம்படியேனும் கிடைக்கச் செய்வது புண்ணியம் அன்றோ? செலவின்றிப் புண்ணியம் தேடும் வழி வேறு உண்டோ?

போன வருஷம் நம் தேசம் எங்கும் உற்பத்தியான கதர் ஆடையின் விலை மதிப்பு 33 லட்சம் ரூபாய். இதனால் 2198 கிராமங்களிலே

பஞ்சு கொட்டுவதில்	...	703 பேருக்கும்
நூல் நூற்பதில்	...	90272 பேருக்கும்
நெசவு செய்வதில்	...	4672 பேருக்கும்

பிழைப்பு ஏற்பட்டது; ஊரார் பசி தணிந்தது. ஆகலின் கதர் ஏழைகளுக்குக் கஞ்சிவார்க்கிறது, சீமைத் துணி வாங்கினால், நம் நாட்டு ஏழைகளின் வயிறு காய்கிறது, மனம் வாடுகிறது; உடல் உலர்கின்றது.

ஆண்டுதோறும் இந்தியாவில் இறக்குமதியாகும் சீமை வேஷ்டி, புடவை, நூல் இவைகளின் கிரயம் 66 கோடி ரூபாய், இவ்வளவு தொகை தேசத்தை விட்டுப் போகையில் தேசம் வறுமையில் வாடக் கேட்கவேண்டுமோ?

பாரத மக்களே! பாவம் செய்யவேண்டாம்; புண்ணியமே செய்யுங்கள், பாரதமாதா கதறிக் கூறுகிறாள்! கதர் கட்டுங்கள், கஞ்சி வாருங்கள், கதி மோக்ஷம் தேடுங்கள், பரதேச ஆடை கட்டி பலரைப் பரதேசியாகத் தவிக்கவிடாதீர்கள், பரம புண்ணியத்தைத் தேடிக்கொள்ளுங்கள். பாக்கியம் பெறுங்கள்.

ஏழை மகன்.

நாட்டு நடப்பு.

நாங்குநேரித்தாலுகா வள்ளியூர் கணேசன் வாசகசாலையின் ஆதரவில் திருவாளர்களான K. சண்முகசுந்தரம்பிள்ளை வே. சுப்பிரமணிய பிள்ளை சிவ. அருணாசலம் பிள்ளை முதலியவர்களின் நன்முயற்சியால் காந்திஅடிகளின் சஷ்டி அப்த பூர்த்தி தினத்தை 2—10—29ல் சுமார் ஒரு கோட்டை அரிசிவரை சமயல்செய்து ஏழைகளுக்கு அன்னமிட்டும் அடிகளின் சரித்திரத்தை வாசித்து பொது மக்களுக்குத்தெரிவித்தும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பெற்றன. உடனிருந்துதவிய பேட்டை க. திருஞானசம்பந்தன் அறிவிக்கிறார்.

நகர நடப்பு.

சுதேசபால்ய சங்கத்தின் ஆதரவில் காந்தி அடிகள் சஷ்டி அப்த பூர்த்தித்தினத்தை தமிழ் மக்கள் முறைப்படி நட்சத்திரத்தை அனுசரித்து சென்ற புரட்டாசி ௴ 15உ திங்கட்கிழமை மகம் நட்சத்திரத்தன்று நடத்தக்கருதி அதோடு சங்கத்தின் ஏழாவது ஆண்டு நிறைவுவிழாவையும் சேர்த்து மிகச் சிறப்புடன் சங்கத்தார் நடத்தினார்கள். அப்பொழுது காரைக்குடி ஊழியன் ஆசிரியர்— திருவாளர். ராய-சொக்கலிங்கஞ் செட்டியாரவர்கள் விஜயஞ்செய்து தலைமை வகித்தார்கள். அடிகளிடத்து அன்புடையார் பலர் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். ஏழைகளுக்கு அன்னம் அளிக்கப்பெற்றது.

பொதுமக்கள் ஆதரவில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியார் குறித்த 2—10—29ல் காந்தியடிகள் சஷ்டி அப்த பூர்த்தி தினத்தைக் கொண்டாடுவதன்பொருட்டு வட்டக்கிணற்று மைதானத்தில் பிரமாண்டமான கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீமாந். பாபா ஜான் சாஹிப் அவர்கள் தலைமைவகித்தார்கள். தேசபக்தர்கள் பலர் பேசினார்கள். பொதுக்கூட்ட அறிக்கையில் முனிசிப்பல் சேர்மென் திருவாளர் ஜே யல். பி. ரோஜ் விக்டோரியா அவர்களும், திருவாளர். சி. வ. நல்லபெருமாள் பிள்ளையவர்களும், கைச்சாற்றிட்டிருந்தது கவனிக்கத்தக்கது.

காங்கிரஸ்கமிட்டியார் பல தொண்டர்களுடன் தெருத்தெருவாகச்சென்று ரூபாய் 300 க்குக் கதர் விற்பனை செய்தார்கள். சுமார் நூறு காங்கிரஸ் அங்கத்தினர் சேர்ந்தார்கள். திருவாளர்களான சி. வ. நல்லபெருமாள் பிள்ளையவர்கள் ஜே யல், பி, அவர்கள் K. L கந்தசாமிபிள்ளையவர்கள் சி. சு. வ. சுப்பையா பிள்ளையவர்கள் * பெரிய விநாயகம் பிள்ளையவர்கள் முதலானபிரபலஸ்தர்கள் காங்கிரஸ் அங்கத்தினர்களாகச் சேர்ந்து கதர் வாங்கியது போற்றுதற்குரியது. மாலையில் பஜனையுடன் ஊர்வலம் நடைபெற்றது. காரியதரிசி பெ. க. அவர்கள் உழைப்பு பாராட்டத் தக்கது.

திறப்புவிழா

வேளாள வாலிபர் சங்கத்தின் ஆதரவில் பந்து விளையாட்டு நிலையத்தின் திறப்புவிழா இடங்கொடுத்து வேலியிட்டு பண்படுத்தி உதவிய கனம் சி. வ. நல்ல பெருமாள் பிள்ளையவர்கள் தலைமையில் மிகச் சிறப்புடன் சென்ற ஆவணி மீ 31உ ஞாயிற்றுக் * கிழமை மாலையில் நடைபெற்றது. தேவஸ்தான கமிட்டித் தலைவரும் வழக்கறிஞருமாகிய திருவாளர் S. குமாரசாமிபிள்ளை அவர்கள், திரு. சி. வ. அவர்கள் இடங்கொடுத்த பேருதவியின் பெருமையைப்பற்றியும் பிறபலவும் பேசினார்கள். திருவாளர் வக்கீல் A. C. பால் நாடார் அவர்கள் வேளாள சங்க பந்து விளையாட்டு நிலையத்தில் பிறசமூக மக்களை அழைத்தும் விளையாட இடங்கொடுத்தும் உதவிய செய்கை பாராட்டத்தக்க தெனவும் பிறவுமாகப் பேசினார்கள். பிறகு திருவாளர். இ. வெண்ணிமாலை பிள்ளை B. A., B. L., அவர்கள் திருவாளர் சி. வ. அவர்களை பந்துவிளையாட்டு நிலையத்தைத் திறந்துவைக்கும்படி கேட்டுக் கொள்ள அதனை சங்கக் காரியதரிசி திருவாளர் K. L. கந்தசாமி பிள்ளையவர்கள் ஆமோதிக்க பிள்ளையவர்களால் திறந்துவைக்கப் பெற்று சிறிது நேரம் பந்து விளையாடப்பெற்றது. நகரிலுள்ள பிரமுகர்கள் இருநூறுபேர்களுக்கு அதிகமாக வந்திருந்தனர். அழைப்புப் பெற்ற அநேகர் தவறாமல் வந்திருந்தனர் வந்தவர்கட்கு சிற்றுண்டி வழங்கப்பெற்றது. இறுதியில் வந்தனத்துடனும் மங்களத்துடனும் கூட்டம் கலைந்தது.

குறிப்பு:—திறப்பு விழாத் தலைவாவர்கள் பேசியதின் சாரம். "ஆரம்ப காலத்தில் ஆடம்பரமாகச் செய்துவிட்டு நாளாகநாளாக நழுவ விட்டுவிடும் பெரும் பகுதியான வழக்கம்போலில்லாமல் வெகு திறமையாக நீங்கள் நடத்தவேண்டும். சந்தாத் தொகைகளை ஒழுங்கு பெற வசூலிக்கவும் அங்கத்தினர்கள் கொடுக்கவும் வேண்டும்" என்பதே. இதனை சங்கத்தார் ஊன்றிக் கவனித்து ஒழுகுமாறு வேண்டுகின்றோம். அங்கத்தினர் அதிகம் சேர்வேண்டியதவசியமாதலால் சந்தாத் தொகையை குறைக்கவேண்டிய தவசியம். பத்திராதிபர்.

கண் கோள்ளாக் காட்சி

சி. சு. வ. விலாசக் கூட்டு பங்காளிகளிலொருவரான காலஞ்சென்ற மா. கிருஷ்ணபிள்ளையவர்களின் பொருள்கொண்டு செய்த வெள்ளி ரிஷப வாகனங்கள் இரண்டும் நாளது ஐப்பசிமீ 1உ வியாழக்கிழமை காலையில் காலஞ்சென்ற பிள்ளையவர்கள் வீட்டினின்று மேள வாத்தியங்களுடன் எழுந்தருளச் செய்து வீதிவலமாக ஆலயம் வந்து ஸ்ரீ சுவாமி அம்மனை வாகனங்கள் மீது எழுந்தருளச் செய்து பிள்ளையவர்கள் குடும்பத்தினரும் வேறு பிரமுகர்களும் புடை சூழ திரு வீதி வலவந்த காட்சி கண்கொள்ளாக்காட்சியேயாகும். வாகனங்கள் வெகு வேலைத்திறமைப்பாடுளதாகக் காணப்படுகின்றன. கோவில் குளம் தேர் திருவிழா வேண்டாமென்று பேசும இக் காலத்தில் சுமார் பதினாயிரத்துக்கு மேல் செலவிட்டு இப்பெரும் புண்ணிய கைங்கரியத்தைச் செய்தது போற்றுதற் குரியது.

புதிய முறையிற் கற்பித்தல்

நியூஜிலந்தில் சினிமா மூலமாகப்பிள்ளைகளுக்குப் பாடங் கற்பித்துக் கொடுக்கலாம் என்ற முறை அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

கோமயம்.

பசுவின் சாணம் நஞ்சுள்ள கிருமிகளைக் கொல்லும் மருந் தென்பதை அறிந்தே நமது பெரியோர்கள் பசுஞ்சாணத்தால் வீடு மெழுகப் பழகிவந்தார்கள்.